[2003 மார்ச் 24

திரு. செ. இராமலிங்கம் அவர்கள் 1971 முதல் 1976 வரை கடலாடி தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினர்கள் மறைவினால் அவர்களை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 41, திரு. வி.ஆர். ராஜாங்கம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

41—

பாலம் கட்டுதல்

***6598—திரு. வி.ஆர். ராஜாங்கம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், அய்யப்பநாயக்கன்பட்டி அருகில் தென்கரை வாய்க்கால் மீது பாலம் கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2003 மார்ச் 24]

பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. வி.ஆர். ராஜாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கஜானா காலியாகிவிட்ட நிலையிலும் ஏழையெளிய மக்களுக்கு உதவிட எனது மனதில் என்றும் இடம் உண்டு என்று, எனது தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான இந்தப் பாலம் கட்டும் பணியைப் பரிசீலனையில் எடுத்துக்கொள்வோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அரசு அறிவித்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பு தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் இன்று எத்தனையோ திட்டங்களை நிறைவேற்றுகின்ற வேளையில் இந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தர மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான சோழவந்தானில் உள்ள குருவித்துறை வல்லவபெருமாள் கோயில், குரு கோயில் வைகைக் கரையில் அமைந்துள்ளது. தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அங்கு வழிபாடு செய்து வருகிறார்கள். கடந்த காலத்தில் சாலை வசதி இல்லாமல் இருந்தது. தற்போது மாண்புமிகு இதயதெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு சாலைகளைப் புதுப்பித்துத் தந்துள்ளது. இங்கு செல்வதற்காக மாற்று வழி ஒன்று உள்ளது. அந்த மாற்று வழியில் ஒரு புதிய பாலத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டித் தந்தால் அங்குள்ள பக்தர்கள் செல்வதற்கு நெரிசல் இல்லாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் எனது தொகுதியான....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. ராஜாங்கம், ஒரே பாலத்தோடு நில்லுங்கள்.

திரு. வி.ஆர். ராஜாங்கம்: சின்ன கோரிக்கை இருக்கிறது. அந்தப் பாலத்தோடு சேர்த்து ஒரு சிறிய கேள்வி. அதோடு, அலங்காநல்லூர், கேட்டுக்கடை அருகில் ஒரு பாலத்தையும், வாடிப்பட்டி யூனியன் அலுவலகத்தின் அருகில் ஒரு பாலத்தையும் கட்டித்தர வேண்டுகிறேன். 100 ஆண்டு காலத்திற்கு முன்னால் பாலங்கள் கட்டப்பட்டன. ஆகவே,

தற்போது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் இவற்றைக் கட்டித் தர அமைச்சர் அவர்களை பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பாலம் கேட்டு, 3 பாலங்களைக் கோரிக்கைகளாகக் கொடுத்து இருக்கின்றார்கள். வரும் நிதியாண்டில் அந்த 3 பாலங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 42, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

42—

சிமெண்ட் தளம்

***13141**—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்திலுள்ள கீழ்பவானி பாசன திட்ட வாய்க்காலில் சிமெண்ட் தளம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.